Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஹனுமதபஞ்ச ரதனம் மற்றும் நவரத்ன மாலை

2011 டிஸம்பர் 24

1187 கர வருஷம் மார்கழி 8ம் தேதி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஹனுமத் பஞ்சரத்னம்
(ஆதி சங்கரரால் அருளப்பெற்றது)

பரம ஞானஸ்வரூபியான ஸ்ரீ ஆதி சங்கரர் பாமர மக்களையும் உயர்த்தும் உன்னத நோக்கத்துடன், விநாயகர், சிவன், விஷ்ணு, அம்பாள், மஹாலக்ஷ்மி, ஸுப்ரஹ்மணியர் என்றவாறு பல தெய்வங்களின் மீதும் பற்பல பக்தி ஸ்லோகங்களை அருளிச் செய்துள்ளார். அவரது அனைத்துப் படைப்புக்களுமே மக்களுக்கு பக்தியை ஊட்டுபவை. ஞானத்தைக் கூட்டுபவை.

இவற்றில் குறிப்பாக 'பஞ்சரத்னம்' என்று பெயருள்ள ஐந்தே 'பத்தி' களைக் கொண்ட உன்னத ஸ்லோகங்கள் இகபர ஸுகத்தை நல்குபவை. கணேச பஞ்சரத்னம் லலிதா பஞ்சரத்னம், மீனாக்ஷி பஞ்சரத்னம், நிருஸிம்ஹ பஞ்ச ரத்னம், ஹனுமத் பஞ்ச ரத்னம் போன்றவை பக்தர்களுக்கு, இம்மையில் நல்ல கல்வியறிவு, செல்வம்,புகழ் இவற்றை நல்குவதோடு மறுமையில் பேரின்பத்தை அளிக்கவல்லவை.

சிறப்பாக, சிரஞ்ஜீவியான ஆன்ஜனேயர்பால் இயற்றப்பட்ட 'ஹனுமத் பஞ்சரத்னத்தை மூல நக்ஷத்ரம், சனிக்கிழமை ஆகிய தினங்களில் படிப்பவர்கள் அனைத்து இன்னல்களிலிருந்தும் விடுபடுவர். சனியினால் ஏற்படும் உபாதைகள் நீங்கப்படுவர். உடல் வலிமை, மனவலிமை பெற்று எந்தக் காரியத்திலும் வெற்றி பெறுவர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கீழே ஹனுமத் பஞ்சரத்ன ஸ்தோத்ரமும் அதனுடைய பொழிப்புரையும் தரப்பட்டுள்ளன.

ஹனுமத் பஞ்ச ரத்ன ஸ்தோத்திரம்

1. வீதாகில விஷயேச்சம்
ஜாதாநந்தாஸ்ரு புலகமத்யச்சம் ।
ஸீதாபதி தூதாத்யம் வாதாந்மஜ மத்ய பாவயே ஹ்ருத்யம் ॥
2. தருண அருண முக கமலம்
கருணாரஸ பூர பூரிதா அபாங்கம் ।
ஸஞ்ஜீவன மாஸே மஞ்ஜுள மஹிமானம் அஞ்ஜனா பாக்யம் ॥
3. ஸம்பரவைர ஸராதிகம் அம்புஜதள விபுல லோசனோதாரம்
கம்புகளம் அநிலதிஷ்டம் பிம்பஷ்வலிதோஷ்டம்
ஏகம் அவலம்பே ।
4. தூரீக்ருத ஸீதார்த்தி: ப்ரகடீக்ருத ராமவைபவஸ்பூர்த்தி:
தாரித தஸமுக கீர்த்தி: புரதோமமபாது ஹனுமதோ
மூர்த்தி : ॥
5. வானர நிகராத்யக்ஷம் தானவ குல குமுத ரவிகரஸத்ருஸம்।
தீன ஜநாவந தீக்ஷம் பவநதப: பாக : புஞ்ஜம் அத்ராக்ஷம்॥
6. ஏதத்பவன ஸுதஸ்ய ஸ்தோத்ரம் யஃபடதி பஞ்சரத்னாக்யம்
சிரமிஹ நிகிலான்போகான் புக்தவா ஸ்ரீ ராம பக்தி பாக்பவதி॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பொழிப்புரை

1. உலகப் பொருட்களால் கிடைக்கக்கூடிய இன்பங்களில் பற்றறவரும், எப்போதும் ஸ்ரீ ராமரையே மனதில் இருத்தி ஆனந்தக் கண்ணீர் மல்கி மயிர்க் கூச்சலுடன் இருப்பவரும் அழுக்கற்ற மனதையுடையவரும். ஸீதாபதியின் தூதர்களில் முதன்மை பெற்றவரும் எப்பொழுதும் தியானம் செய்யத்தக்க வாயு புத்ரரான அனுமனை இப்பொழுது என்னுடைய இதய கமலங்களில் இருத்தி தியானம் செய்கிறேன்.

2. இளம் சூரியனக்கு ஒப்பான காந்தியுடன் தாமரை போன்ற முகமுடையவரும்,பிரவாஹிக்கக் கூடிய கருணை நிறைந்த கடைக்கண் பார்வையுடையவரும், ஸஞ்ஜீவினி மலையைக் கொணர்ந்து யுத்தத்தில் மரித்தவர்களை உயிரெழச் செய்தவரும், போற்றத்தக்க மஹிமையுடையவரும், அஞ்ஜனை பாக்யமான ஆஞ்ஜனேயரைத் தரிசிக்க விழைகிறேன்.

3. மன்மதனின் கணைக்கு ஆட்படாதவரும், தாமரை மலரின் இதழ் போன்ற விசாலமான அழகிய கண்ணழகு படைத்தவரும் சங்கை ஒத்த கழுத்தை உடையவரும் வாயுவைப் போல் பாக்யமுடையவரும் ஸூர்ய மண்டலத்தையொத்து ஒளிர்பவருமான மாருதியைப் போற்றிச் சரணடைகிறேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. ஸீதாதேவியின் துக்கத்தையும் துன்பத்தையும் விரட்டியடித்தும், ஸ்ரீ ராமனின் மஹிமை திறன் இவைகளின் எதிரிகளுக்கும் கூட நன்கு உணர்த்தியதும், பத்துத்தலை ராவணனின் புகழைப் பிளந்ததுமான அனுமனுடைய திவ்ய சரீரம் எப்போதும் என் முன்னே தோன்றட்டும்.

5. வானர சேனைகளில் முதன்மை பெற்றவர்களும், ஸூர்யனது ஒளியில் ஆம்பல் புஷ்பம் அழிவது போல ராக்ஷஸ வம்சத்தை அழித்தவரும், துக்கமடைந்து, நலிந்தமக்களைக் காப்பதில் தீவிரமான வரும் வாயு பகவானின் தவத்தின் பலனாக அமைபவருமான ஸ்ரீஅனுமனை நான் நேரில் கண்டேன்.

6. பலஸ்ருதி :-

ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதரால் இயற்றப்பட்ட இந்த ஹனுமத் பஞ்சரத்னஸ்தோத்ரத்தை பக்தி, சிரத்தையுடன் படிக்கின்ற அனைவரும் இவ்வுலகில் அனைத்து ஸுகங்களையும் நீண்டகாலம் அனுபவித்து நவக்ரஹாதிகளால் ஏற்படும் துன்பங்களிலிருந்து நீங்கப்பெற்று அவர்களின் நன்மைகள் கிட்டி ஸ்ரீ ராமபிரானிடம் நீங்காத பக்தி உடையவர்களாக அமைவர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸுந்தர காண்ட
நவரத்ன மாலை

பரமாத்மா ஸ்ரீ ராமானாக அவதரித்தார். வேதம் இராமாயணமாக உருவெடுத்தது என்று பெரியோர்கள் கூறுவார்கள். இந்த வேதஸாரமான இராமாயணத்திலும் ஸுந்தரகாண்டம் விசேஷமாகக் கருதப்பட்டு இறை வழிபாட்டுக்கு உகந்ததாகப் போற்றப்பட்டு பக்தர்களால் சிரத்தையுடன பாராயணம் செய்யப்பட்டு வருகிறது.ஸுந்தரகாண்டத்தைப் பாராயணம் செய்பவர்களுக்கு, சிறிதளவு முயற்சியினால் அளவற்ற பயன் கிட்டும் என்பதை ஸ்ரீ ஆதி சங்கரர் "அல்பப்ரயாசம், அனல்ப பலம்" என்னும் வார்த்தைகளால் விவரிக்கிறார். ஸ்ரீ ராமன் மீது அனன்ய பக்தி காரணமாக, ஆஞ்ஜநேயரான ஹனுமான், ஸ்ரீ ராமனைச் சந்தித்தது முதல் இராமாயணத்தையே ஆக்ரமித்துக் கொள்கிறார் என்றால் மிகையாகாது.

ஸுந்தர காண்டத்தின் ஸாராம்சமாக விளங்கும் உன்னதமான ஒன்பது ஸ்லோகங்களும் ஒன்பது ரத்னங்களைாகக் கருதப்படுகின்றன. ரத்னச் சுருக்கம் என்ற பதத்திற்கே ஸாராம்சம் என்று பொருள். ஸுந்தர காண்டத்தில் வரும் ஸ்ரீ ஹனுமானுடைய பிரபாவங்களை இந்த ஒன்பது ஸ்லோகங்களும் விவரிக்கின்றன. மிகக்குறைந்த நேரமே எடுத்துக் கொள்ளும் இந்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்லோகங்களை முறைப்படி பாராயணம் செய்து ஸ்ரீ ராமனுக்கு நவரத்ன மாலையாக அணிவித்து அவரது அருளுக்குப் பாத்திரமாகுமாறு பக்தர்கள் பணிவுடனும் அன்புடனும் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள்.

1 ததோ ராவணநீதாயா : ஸீதாயா : ஸத்ருகர்சன : I
இயேஷபதம் அந்வேஷ்டும் சாரணா – சரிதேபதி II

2. யஸ்ய த்வேதாநிசத்வாரி வானரேந்த்ரயதாதவ
ஸ்ம்ருதிர் மதிர் த்ருதிர் தாக்ஷ்யம்ஸகர்மஸு ந ஸீததி II

3. அநிர்வேத ஸ்ரியோமூலம் அநிர்வேத : பரம்ஸுகம்I
அநிர்வேதோ ஹி ஸததம் ஸர்வார்த்தேஷீ ப்ரவர்த்தக:

4. நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய தேவ்யை ச தஸ்யை
ஜனகாத்மஜாயைI
நமோஸ்து ருத்ரேந்த்ர யமநிலேப்ய :
நமோஸ்து சந்த்ர அர்க்க மருத் கணேப்ய II

5. ப்ரியாந் ந ஸம்பவே துக்கம்
அப்ரியாத் அதிகம் – பயம்I
தாப்யாம் ஹி யே வியுஜ்யந்தே
நம : தேஷாம் மஹாத்மனாம்II

6. ராம : கமலபத்ர அக்ஷ : ஸர்வ ஸத்வ மனோஹர: I
ரூபதாக்ஷிண்ய ஸம்பந்ந : ப்ரஸூதோ ஜனகாத்மஜேII

7. ஐயத்யதிபலோ ராம : லக்ஷ்மணஸ்ச மஹாபல: I
தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய ராமஸ்ய
அக்லிஷ்ட கர்மண :II

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

8. யத்யஸ்தி பதி ஸீ ஸ்ருஷ்டா யத்யஸ்தி சரிதம் தப :।
யதி வாஸ்தி ஏக பத்னீத்வம் ஸீதோ பவ ஹநூமத :॥

9. நிவ்ருத்த வநவாஸம் தம் த்வயா ஸார்த்த மரிந்தமம் ।
அபிஷிக்தம் அயோத்யாயாம் கூபிப்ரம் த்ரக்ஷ்யஸி ராகவம்॥

இந்த ஸ்லோகங்களுடைய மையக் கருத்து பின் வருமாறு :

ஸ்லோகம் 1 – (மாணிக்கம்)

ராவணன் ஸீதையை ஆகாச மார்க்கமாய் அபகரித்துச் சென்றான்.அவன் சென்ற பாதை ஸித்த, சாரணர்கள் ஸஞ்சரிக்கும் பாதை. சத்ருக்கள் யாவரையும் அழிக்கும் வல்லமை படைத்த ஆஞ்சநேயர் அதே வானவீதியின் வழியாகக் கடலைக் கடக்க விரும்புகிறார். இந்த மந்த்ரம் ஸூர்ய க்ரஹத்துடன் சம்பந்தமுடையது. ஆகவே சூர்ய க்ரஹத்திற்கு உகந்த மாணிக்கமாகக் கருதப்படுகிறது.

ஸ்லோகம் 2 – (முத்து)

ஸ்ரீ ஆஞ்சநேயரின் சீரிய நினைவாற்றல், நுண்ணறிவு விடாமுயற்சி, செயல்திறம் ஆகிய, வெற்றிக்கு வித்திடும் உயர்ந்த பண்புகள் உடையவர். எவரிடம் இந்த நான்கும் அமையப்பெற்றுள்ளதோ அவர் வெற்றி பெறுவது நிச்சயம்.

அனுமன் கடலைக் கடக்கிறான். கடலில் முத்து உள்ளது. முத்து சந்திர கிரஹத்துக்கு உகந்தது. சந்திரன் மனத்தை ஆள்கிறான். மேற்கூறிய நான்கு பண்புகளும் மனத்தைச் சார்ந்தவை. ஆகவே சந்திரன், முத்து இவைகளுடன் தொடர்பு

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொண்ட இந்த மந்திரத்தினால் மனோபாவம் பெருகி படிப்பு, உத்யோகம், வியாபாரம் யாவற்றிலும் வெற்றி கிட்டும்.

ஸ்லோகம் 3 – (பவழம்)

உற்சாகம் என்பது வெற்றியின் திறவு கோலாக மனிதனை ஊக்குவித்து எல்லர் முயற்சிகளுக்கும் உந்துசக்தியாக விளங்கி சகல ஐஸ்வர்யங்களையும் நல்கிப் பரம ஆனந்தத்தையும் அளிக்கிறது. இது அனுமன் தனக்குத் தானே சொல்லிக் கொண்ட திருவாக்காக, சமுதாய மேம்பாட்டிற்கான கீதஉபதேசமாக, மனக்கவலை மற்றும் மருந்தாக மிளிர்கிறது. பூமாதேவியின் புதல்வனான அங்காரகனுடன் இந்த மந்த்ரம் தொடர்புடையது. அங்காரனுக்குப் பவழம் ஏற்புடையது. ஆகவே இந்த மந்த்ரம் நவரத்னங்களுள் பவழமாகக் கருதப்படுகிறது. இதைப் பாராயணம் செய்வோர் மனக்கவலை நீங்கி மங்களம் பெறுவர் என்பது உறுதி.

ஸ்லோகம் 4 – (மரகதம்)

இந்த ஸ்லோகத்தின் மூலம் அனுமன் தனது ப்ரத்யக்ஷ தெய்வங்களான ராமன்,ஸீதை,லக்ஷ்மணன் இவர்களை முதலில் நினைத்து, பிறகு ருத்ரன்,இந்திரன்,யமன், வாயு,சந்திரன், ஸூர்யன், மருத்துக்கள் ஆகிய தெய்வங்களையும் பிரார்த்தித்துக் கொள்கிறான். ராமதாரக மந்திரமான, இந்த ஸ்லோகத்தின் மூலம் ப்ரார்த்தித்தாவுடன் அசோகவனம் அனுமன் கண்ணில் தென்படுகிறது. ஸுந்தரகாண்டம் என்று பெயர் வந்ததே இந்த

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
மந்திரம் மூலம்தான் என்று ஆன்றோர் கூறுவர். புத்திக்கு அதிபதியான புதன் க்ரஹத்திற்கு இஷ்டமான பச்சை ரத்னம் மரகதமணி. இந்த மந்திரத்தின் பயனாக ஸமயோஜித புத்தி, தெய்வ அனுகூலம், கார்ய ஸித்தி இவையாவும் ஸீதா, ராம, லக்ஷ்மணன் இவர்கள் அனுக்ரஹத்தினால் அனுமான் துணையால் கைகூடும்.

ஸ்லோகம் 5 – (புஷ்பராகம்)

விருப்பு, வெறுப்பு இவற்றை வென்ற மஹான்களைப் போற்றிப் பணிகிறேன். எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம் விருப்பும்,வெறுப்பும்தான், தனக்குப் பிடித்தவற்றில் விருப்பம் ஏற்பட்டு அவற்றின் பிரிவினால் துன்பம் ஏற்படுகிறது. பிடிக்காதவற்றை வெறுப்பதால் பயம் ஏற்படுகிறது.

பகவத் கீதையின் ஸாராம்சமாகிய வேதாந்தக் கருத்துக்களைக் கொண்ட இந்த மந்த்ரம் ஸீதாதேவியின் திருவாக்கினால் கீதோபதேசமாக அமைகிறது. இங்கு ஸீதாதேவி ஒரு ஆன்மீககுருவாக விளங்கிறார்.ஆகவே இந்த ஸ்லோகம் குரு க்ரஹம் சம்பந்தப்பட்டது. குருக்ரஹத்துக்கு ப்ரியான புஷ்பராக ரத்னமாகக் கருதப்படுகிறது. இந்த ஸ்லோகத்தின் பலனாக பெரியோர்களின் தொடர்பு ஏற்பட்டு ஸத்ஸங்கம் ஆன்மிக ஞானம்கிட்டும். பரமானந்தம் ஏற்படும்.

ஸ்லோகம் 6 – (வைரம்)

இந்த ஸ்லோகத்தின் மூலம் அனுமன் ஸௌந்தர்ய தேவதையான ஸீதாதேவிடம் ஸ்ரீ ராமனின் அங்கலாவண்யங்கள், குணாதிசியங்கள்,நடையுடை பாவனைகளை வர்ணிக்கத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தொடங்குகிறார். இவ்வர்ணனைகள் மூலம் ஸீதாதேவிக்கு அனுமனிடம் முழுநம்பிக்கை ஏற்படுகிறது. இந்த வர்ணனை ஸுந்தர காண்டத்தின் வைரம் போன்ற பகுதியாகக் கருதப்படுகிறது. சுக்ரக்ரஹத்துடன் தொடர்புடையது. சுக்ரனுக்கு உகந்தது. ஒளிபரப்பக்கூடிய வைரரத்னமாகும். இந்த மந்த்ரத்தைப் பாராயணம் செய்வதன் மூலம், அபூர்வசக்தி, ஆரோக்கியம், காந்தி, வசீகரம், ராமபக்தி ஆகியவை ஸித்திக்கும்.

ஸ்லோகம் 7 – நீலமணி

கோசலை நாட்டின் மாமன்னனாகிய ராமன் பெரிய பராக்ரம சாலி, தம்பி லக்ஷ்மணன் மாவீரன். க்ஷேமத்தையே விளைவிற்கும் ஸ்ரீ ராமன் எப்பொழுதும் வெற்றியே கொள்வான் என்று ஸீதாதேவியிடம் எடுத்துரைத்து அசோக வனத்தைச் சின்னா பின்னமாக்கி, காவலர்களை அழித்து ராவணனுக்கும் ஏனைய அசுரர்களுக்கும் பாடம் கற்பிக்கிறான். இந்த ஸ்லோகம் அனுமனின் வீரகர்ஜனையாகவும், இடி முழக்கமாகவும் அமைந்துள்ளது. இது காறும் ஸீதையைப் பிடித்திருந்த சனி ராவணனைப் பிடிக்க ஆரம்பித்து விட்டான் என்று பறை சாற்றுகிறான். தசரதச் சக்ரவர்த்திக்கு அனுக்ரஹித்த சனி பகவான், ராமனுக்கும் அனுகூலம் செய்யத் தொடங்கி விட்டான் என்பதை இந்த ஸ்லோகத்தின் மூலம் உணர்ந்து கொள்ளலாம். சனி பீடை விலகல், கீழான குணங்கள் நீங்கி, காமக்ரோதங்களிலிருந்து விடுபட்டு பகைவர்களை வெற்றி கொள்ளுதல் ஆகியவை இந்த மந்திரத்தினால் கிட்டும். சனிக்ரஹத்துக்குகந்த நீலமணி ரத்னமாக இது கருதப்படுகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்லோகம் 8 – (கோமேகதம்)

இந்த ஸ்லோகம் ஸீதாதேவியின் சூளுரையாக அமைகிறது. பல அரக்கர்களை வதம் செய்த அனுமன் இந்தரஜித்தின் ப்ரம்மாஸ்திரத்தினால் கட்டுண்டு ராவணன் முன் நிறுத்தப்பட்ட போது ஹிதோபதேசமாக ராவணனிடம் ராமகோபத்திற்கு ஆளாகாமல்,ஸீதாதேவியை இராமனிடம் திருப்பியனுப்பக் கோருகிறான். இதனால் வெகுண்ட ராவணன் அனுமனின் வாலைத் தீயிட்டுக் கொளுத்தி ஊர் வலமாக இழுத்துச் செல்லப் பணிக்கிறான். இதனால் துடிதுடித்த ஸீதை அக்னி தேவனைப் ப்ரார்த்திப்பதாக இந்த ஸ்லோகம் அமைகிறது

தன் கற்புத்தவம் உண்மையானால் தான் பதிவ்ரதை என்பது உண்மையானால் இராமனுக் கே உரித்தானா ப்ரியமான மனைவி என்பது உண்மையான்ால், அக்னிதேவன் அனுமனுக்கு வெப்பம் நீங்கி குளிர்ச்சி தர வேண்டும். என்று வேண்டிக் கொள்கிறாள். இவளுடைய ப்ரார்த்தனைக்கிறங்கி, அக்னிதேவன் அனுமனை தீயின்தாக்கம் படவொட்டாமல் மாறாக குளிர்ச்சியையே நல்குகிறான்.

தீப்புண் போன்ற தோல் சம்பந்தமான வியாதிகள் ராகுக்ரஹத்தின் பீடையால் ஏற்படுகிறது இந்த ஸ்லோகத்தை பக்தி ச்ரத்தையுடன் பாராயணம் செய்பவர்களுக்குத் தொற்றுநோய்கள் காற்று, நீர், நெருப்பு, பூகம்பம் இவகைளால் விபத்துக்கள் ஏற்படாது. ஸ்த்ரீகளுக்கு, மாங்கல்ய பலம் அதிகரிக்கும் .கணவன் மனைவி இருவரிடமும் பரஸ்பர அந்நோயந்யம் அதிகாரிக்கும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ராகுபகவானக்குப் ப்ரீதியான கோமேதக ரத்னமாக இந்த ஸ்லோகம் கருதப்படுகிறது.

ஸ்லோகம் 9 – (வைடூர்யம்)

சிறைவாசம் நீங்க கேதுவின் அருள் வேண்டும். இந்த ஸ்லோகம் கேதுவின் தொடர்புடைய வைடூர்ய ரத்னமாகக் கருதப்படுகிறது.ஸீதையிடமும் ராமனிடமும், அனுமன் தீர்க்க தர்சனமாகக் கூறிய சொற்கள் இவை. ஸீதையிடம் விடை பெற்றுக் கொண்டு இந்தச் சொற்களால் அவளை மகிழ்ச்சியுறச் செய்கிறார். கூடிய சீக்கிரம் கணவனான ராமன் கையால் சத்துருக்கள் அழிந்து அவளை அழைத்துக் கொண்டு போய் வனவாசம் முற்றுப் பெற்று அயோத்தியில் பட்டாபிஷேகம் நிகழப்போகிறது என்று உரைக்கிறான். ஸீதையிடம் இவ்வாறு கூறியதை ராமனிடமும் கூறி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறான். இப்படிஅனுமன் மனத்திரையில் நடத்திவிட்ட பட்டாபிஷேகம் அவனது மேதாவிலாசத்தைக் காட்டுகிறது.



A.R. Screens, Cell : 96000 20492

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அச்சிட்டு வெளியிட்டோர் :-

Prof. T. சங்கரநாராயணன்

305, விஜயபாக்கியம் ரெஸிடென்ஸி, வேளச்சேரி மெயின் ரோடு,

வேளச்சேரி , சென்னை - 600 042.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,